# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# Annual Report

# 2015



කම්කරු දෙපාර්තමේන්තුව

**தொழில் திணைக்களம்**

**Department of Labour**

# ஆண்டறிக்கை

# 2015

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரின் செய்தி | 3 |
| | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளரின் செய்தி | 4 |
| | தொழில் ஆணையாளர் அதிபதின்செய்தி | 5 |
| 1. | தொழில் திணைக்களம் | 7 |
| 2. | தொழில் பரிசோதனைகள் | 12 |
| 3. | சம்பளம், சேவை நிபந்தனைகளினூடாக ஊழியர்கள் சமூகத்தின் பாதுகாப்பு | 17 |
| 4. | சமூகப் பாதுகாப்பினை நோக்கிச் செயற்படும் நிகழ்ச்சித் திட்டம் | 19 |
| 5. | பெண்கள் மற்றும் சிறுவர்கள் நடவடிக்கைகளுக்கான பங்களிப்பு | 22 |
| 6. | தொழிலினைப் பாதுகாப்பதன் பொருட்டு நிறைவேற்றிய சேவைகள் | 25 |
| 7. | திட்டமிடுதல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு | 30 |
| 8. | தொழில் திணைக்களத்தின் பொது நிர்வாகம் | 32 |
| 9. | புள்ளிவிபரக் கையோடு | 35 |
| 10. | பின்னிணைப்பு | 47 |

## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரின் செய்தி



தொழில் திணைக்களம் மிகப்பிரதான அரச நிறுவனமாகும். இது தனியார் துறை ஊழியர்களுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களை அமுல்படுத்துகின்றது. அனைத்து தனியார் துறைகளுடன் தொடர்புடைய 63 சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்களை அமுல்படுத்துவதே இத்திணைக்களத்தின் பிரதான பணியாகும்.

மேலும், கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல், வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தரப்புகளின் நடுவராகச் செயற்படுதல், சமூகக்கலந்துரையாடலை மேம்படுத்துதல், கூட்டுஉடன்படிக்கைகள் கைச்சாத்திடலுக்கு உதவுதல், கைத்தொழிலுடன் தொடர்பான தொழில்தரங்களை உருவாக்கிக் கண்காணித்தல், ஊழியர் சேமலாப நிதியத்தை மேம்படுத்துதலும் கண்காணித்தலும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொழிலில் அமர்த்துதலுடன் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் சுகாதார நலன்களிற்கான முறைசார் நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல் என்பன உள்ளடங்கலாக பாரிய விடயப் பரப்புகள் திணைக்களத்தினால் கவனிக்கப்படுகின்றன.

நவீன உலகத்திற்குப் பொருத்தமான முறையில் தொழில் திணைக்களத்தை நவீனமயப்படுத்துதல் தற்காலத்தின் தேவையாக இருக்கும் பொழுது, அதனை மக்கள் நட்புடைய திணைக்களமாக மீள அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொழில் திணைக்களத்தின் வருடாந்த குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை அடைவதற்கு உதவிய அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கக் கிடைத்த சந்தர்ப்பமாகக் கொள்வதுடன், மேலும் அவர்கள் துணிச்சலுடனும் பலத்துடனும் தமது கடமைகளைச் திறம்பட ஆற்ற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டபிள்யு. டி. ஜே. செனவிரத்ன

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளரின் செய்தி



ஒரு நாட்டின் உற்பத்தி செயன்முறையுடன் தொடர்புடைய தரப்பினர்களா தொழில்தருநர்களுக்கும், ஊழியர்களுக்குமிடையில் சரியான உறவின் ஊடாக கைத்தொழில் சமாதானத்தை உருவாக்குதல்இ வலிமையான உள்நாட்டுப் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கான பிரதான காரணியாகும்.

இருதரப்பினர்களுக்குமிடையில் வேறுபாடுகள் மற்றும் மனப்பாங்குத்தாக்கங்களின் காரணத்தினால் பலதரப்பட்ட பிரச்சினை நிலைமைகள் எழக்கூடும் என்பதுடன் அதன் எதிர்மறை தாக்கங்கள் கைத்தொழில் சமாதானத்தை முறிவடையச் செய்யக்கூடியதாகும். இதன் விளைவு நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரத்தையும் பின்னடைவடையச் செய்யும்.

இதன் பிரகாரம், தொழில்சட்டங்கள் மற்றும் கட்டளைகளை அமுல்படுத்துதல், தொழில் பரிசோதனைகளை நடாத்துதல், சமூகபாதுகாப்பு நிகழ்ச்சிகளை அமுல்படுத்துதல் மற்றும் சமூகக்கலந்துரையாடலை மேம்படுத்துதல் போன்றவற்றின் ஊடாக தொழில் துறையில் உள்ள தரப்பினர்களிடையே கைத்தொழில் சமாதானத்தை தாபிக்கும் பாரிய பொறுப்பு தொழில் திணைக்களத்தினதாகும்.

திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு தலைமைத்துவதற்கு மனப்பூர்வமான வாழ்த்துத் தெரிவிக்கக் கிடைத்த சந்தர்ப்பமாகக் கருதுவதுடன், அனைத்து நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக செய்வதற்கு உதவிய தொழில் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எஸ். எம். கோட்டாபய ஜயரத்ன

செயலாளர்

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

# தொழில் ஆணையாளர் அதிபதின்செய்தி



தொழிற்றிணைக்களத்தின் 2015ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை மிகவும் மகிழ்ச்சியுடன் உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன். இந்த வருடத்தினுள், தொழில்திணைக்களத்தின் சேவை தொடர்பாகச் சுருக்கமாகச் சமர்ப்பிக்கப்படும் இந்தக் கூற்றுக்கள் தொழில் உறவுகள் தொடர்பாக ஆர்வம் காட்டும் சகல திறத்தவர்களுக்கும் பாரிய நன்மையாக அமையும்.

தொழிலாளர்கள், தொழில்தருநர்கள் மற்றும் அரசு என முத்திறத்தவர்களின் இணக்கத்துடனும் சம்மதத்துடனும் கட்டியெழுப்பப்படும் கைத்தொழில் அமைதியைப் பேணிச் செல்வதன் ஊடாக தேசியப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு தொழில் திணைக்களத்தின் பங்களிப்பினை வழங்குவதற்கு இயலுமானதாக தொழில் துறையில் முன்னேற்றத்தினை நோக்கி தொழில் சட்டங்கள் தற்போதைய காலத்திற்குப் பொருத்தமான வகையில் திருத்தங்களைச் செய்யும் நடவடிக்கைளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுத்தப்பட்டு ஒரு வருடமாவதுடன், அதில் விசேடமாகத் தனியார் துறையினருக்கு ஆகக் குறைந்த சம்பளத்தினை பத்தாயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கும் வரவு செலவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவு தொடர்பாக சட்டமொன்றினை இயற்றக்கூடியதாகவும் இருந்தமை பாரிய பொறுப்பொன்றாகும். 2013 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தினை சிறுவர் தொழிலற்ற மாதிரி வேலைத்திட்ட வலயமாக அமைக்கும் வேலைத்திட்டம் 2015ஆம் ஆண்டாகும்போது முழு இலங்கையையும் உள்ளடக்கும் வகையில் செயற்படுத்த முடிந்தது. 2015 ஆம் ஆண்டு உலக சிறுவர் தினத்திற்கு ஏககாலத்தில் கொழும்பு, பதுளை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் சிறுவர் தொழிலுக்கு எதிரான நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டதுடன் சகல திறத்தவர்களையும் அறிவூட்டுவதன் பொருட்டு ஒன்றிணைந்த திட்டமொன்றினைக் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையின் மிகப் பெரிய ஓய்வூதிய நன்மைகள் நிதியமான ஊழியர் சேமலாப நிதியத்தின் புதிய நிகழ்ச்சித்திட்டமாக 30% முன்நன்மைகள் கொடுப்பனவு 2015 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் ஆரம்பிப்பதற்கு முடிந்தமை தொழில் திணைக்களத்தின் வரலாற்றில் மிகவும் சிறப்பான வெற்றியாகும். அத்துடன் ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்களுக்கு தங்களுடைய கணக்கு மீதிகளை தாங்களே சரிபார்த்துக்கொள்ளக் கூடிய வகையில் இயந்திரம் ஒன்றினைப் பொருத்தும் நடவடிக்கையின் மூலம் ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு வசதிகளைத் திட்டமிடுவதற்கு இயலுமானதாக இருந்தது.

சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்துவதனூடாக மிகவும் சிறப்பான தொழிலாளர்கள் உறவொன்றினை கட்டியெழுப்பக் கூடியவகையில் தொழில் திணைக்களம் இந்த வருடத்தில் முயற்சி எடுத்துள்ளதுடன் சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு

தொடர்பாக நாடு பூராகவும் சிருஷ்டிக்கப்பட்ட போட்டிகள் மற்றும் சமூகப் பேச்சு வன்மைத்திறமைப் போட்டிகளை நடத்தக் கூடியதாக இருந்தது.

எதிர்பார்த்த குறிக்கோளினை அடைவதன் பொருட்டு திணைக்களத்தின் சகல பிரிவுகளினதும் அலுலவர்கள் செயற்பட்டதுடன் அது தெடர்பாக என்னுடைய மெச்சுதல்களைத் தெரிவிக்கின்றேன். அதுபோன்று தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சிற்கும் மற்றும் சர்வதேச தொழில் தாபன கொழும்பு அவலுகத்தின் பங்களிப்பினையும் மனப்பூர்வமாக நினைவு கூர்கின்றேன்.

எம்.டீ.சாந்தினி அமரதுங்க

தொழில் ஆணையாளர் அதிபதி

தொழில் திணைக்களம்

# 01. தொழில் திணைக்களம்

இலங்கையின் தொழிலாளர் வகுப்பினரின் பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மருவிய அரசுசார் மற்றும் தனியார்துறை ஊழியர் சமூகத்தினை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய நலன்களை போன்று தொழில்தருநர்கள், தொழிலாளர்கள் உறவுகளைப் பாதுகாப்பதன் மூலம் மிகவும் நல்லதொரு நிலையில் சகல நிறுவனங்களிதும் விளைதிறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும் தொழில் திணைக்களம், தற்பொழுது மேற்கூறிய நோக்கத்தினை நிரூபிப்பதற்குச் செயற்படும் முன்னணி அரசு நிறுவனமொன்றாக விளங்குகின்றது.

இது போன்று மேலும் விளைதிறன் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் தொழில் திணைக்களத்தின் வரலாறு தொடர்பாக மதிப்புரை செய்யும் போது, இலங்கை பிரித்தானியாவின் கீழ் குடியேற்ற நாடொன்றாக அமைந்திருந்த (கி.பி 1815 - கி.பி 1948) காலத்தின் ஆரம்பத்தில் வியாபார ரீதியான பொருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கு ஆட்சியாளரினால் அளிக்கப்பட்ட கவனத்தை ஈர்க்கும் பல சலுகைகளைக் காரணம் காட்டி தேயிலை மற்றும் கோப்பிப் பயிர்ச் செய்கையினை விரிவாக்குவதற்கு பிரித்தானியா வியாபாரிகள் சகல பண முதலீடுகளையும் செய்வதற்கு ஆர்வம் காட்டியதுடன், சகல நிலங்களையும் பலவந்தமாக சுவீகரித்ததுடன் பலவிதமான தண்டனைக்குட்படுத்தியதுடன், தலைவரி போன்ற பல விதமான வரி வகைகளை விதித்து பிரித்தானியர்களுடைய அதிகார எல்லையை விஸ்தாரமாகப் பரப்பிய இந்த புதிய தொழிலுக்கு ஊழியத்தை வழங்குவதனை பூர்வீகக் குடிமக்களான சிங்கள மக்கள் எப்பொழுதுமே நிராகரித்து வந்தமையினால், அத்தியாவசிய உற்பதிக் காரணியாகக் கருதப்படும் ஊழிய வளம் பாரதூரமான குறைபாட்டிற்கு முகம் கொடுக்க, இலங்கை பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்குள் உள்நுழைந்த பிரித்தானிய வியாபாரிகளும், ஆட்சியாளர்களும் மிகவும் சிக்கல் நிறைந்த சூழ்நிலைக்கு முகம் கொடுத்தார்கள். இதற்குத் தீர்வாக 1824ஆம் ஆண்டு மிகவும் குறைவான சம்பளத்திற்கு தென்னிந்திய தமிழ் தொழிலாளர்களை இந்த நாட்டிற்கு கொண்டு வந்து குறைந்த வசதிகளின் கீழ் அவர்களுடைய ஊழியத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

காலம் தாழ்த்தி இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தென்னிந்திய தமிழ் தொழிளாளர்களினால் உண்டான சனத்தொகையின் அதிகரிப்பினால் 1921ஆம் ஆண்டு இடம்பெற்ற குடிசனக் கணக்கெடுப்பிற்கு ஏற்ப தென்னிந்தியா மூலமாக உண்டான மக்களின் எண்ணிக்கையானது 602,700 ஆக உயர்ந்த பெறுமதியை காட்டியதுடன், ஆகக் குறைந்த வசதிகளின் கீழ் ஆகக் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்த அவர்களது வாழ்க்கை நிலைமை மிகவும் கீழ் நிலையிலிருந்ததுடன் அவர்களுக்கு நன்மைகளை வழங்குவதனை நோக்காகக் கொண்டு 1923ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ''இந்தியக் குடிவரவு தொழிலாளர்கள் கட்டளைச் சட்டம்'' இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானியர்களினால் நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கப்பட்டது. அதே போன்று இந்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான இயந்திரமாக இந்தியக் குடிவரவு

தொழிலாளர் கட்டுப்பாட்டாளர் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளதுடன் காலம் கடந்து படிப்படியாக இலங்கையர் என்ற அடையாளத்தினால் அலங்கரிக்கப்பட்ட தொழிலாளர் வகுப்பினர் ஒன்றுஉருவாகியதுடன் அந்த தொழிலாளர் சமூகம் எதிர்நோக்கிய பல்வேறுபட்ட தொழில் பிரச்சினை தொடர்பாக தீர்வினை வேண்டி நிருவாக வகுப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டதுடன் அந்தப் பிரச்சினையை தீர்த்து அதற்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதனை" இந்திய குடிவரவு தொழிலாளர் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்கு" கையளித்ததின் பின் தொழில் திணைக்களம் தேசிய ரீதியில் செயற்பட ஆரம்பித்தமை ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றாக.

இதன் பிரகாரம், 1931ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொழில் திணைக்களம் தாபிக்கப்பட்டதுடன் "தொழில் கட்டுப்பாட்டாளர்" இன் கீழ் இயங்கியது. 1945ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் "தொழில் கட்டுப்பாட்டாளர்" என்னும் பதவிப் பெயர் "தொழில் ஆணையாளர்" எனவும், மீண்டும் 1994ஆம் ஆண்டில் மேலும் அதிகாரங்களுடன் "தொழில் ஆணையாளர் நாயகம்" எனவும் மீள் பதவி மாற்றப்பட்டது. தற்போது தொழில் திணைக்களமானது தொழில் ஆணையாளர் நாயகத்தின் கீழ் இலங்கை சட்டவாக்க மன்றத்தால் ஆக்கப்படுகின்ற 63 தொழில் சட்டங்கள் மற்றும் கட்டளைகளை அமுல்படுத்தும் பணியில் 92 வருட காலமாக ஈடுபட்டுள்ளது. சர்வதேச தொழில் தாபனத்தின் அங்கத்தவராக ஆனதன் பின்னர், தொழில் பாதுகாப்பு மற்றும் நலன்களுடன் தொடர்பான 41 மாநாடுகள் அமுல்படுத்துவதற்கு தொழில் திணைக்களமும் கட்டுப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய பொருளாதார விரிவாக்கத்துடன், தனியார் துறையும் கூட பரந்தளவில் விரிவடைந்துள்ளது. இதன் விளைவாக பாரிய எண்ணிக்கையிலான ஊழியர்கள் தனியார் துறையில் தொழில் பார்க்கிறார்கள். தற்பொழுது ஊழியர்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குதல், ஊழியர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு தொழில் சட்டங்கள் மற்றும் கட்டளைகள் தொடர்பில் தொழில் தருநர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், நிறுவனத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு தொழில் தருனர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகிய இரு தரப்பினர்களுக்கிடையில் சரியான உறவை ஏற்படுத்த பெரு முயற்சி எடுத்தல் போன்ற அரிய சேவைகளை தொழில் திணைக்களம் ஆற்றுகின்றது. 2015.12.31 இல் மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை 2,403 ஆகும். தொழில் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பணியினை ஆற்றுவதற்கு இவ் அலுவலர்கள் தமது தோள்களில் ஏற்றுள்ளனர்.

இலங்கைளில் உள்ள 7000000 வேலையாளர் அணியினரில் நானாவித உதவி தேடுபவர்களுக்கு நானாவித சேவைகளை தொழில் திணைக்களம் வழங்குகின்றது. இதற்கு 13 பிரிவுகள் இணைந்து தொழிற்படுகின்றன. மேலும், திணைக்களத்தின் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தும் செயற்பாட்டின் கீழ் 11 வலயத் தொழில் அலுவலகங்கள், 40 மாவட்டத் தொழில் அலுவலகங்கள், 17 உப தொழில் அலுவலகங்கள், 10 மாவட்டத் தொழிற்சாலைப் பரிசோதனை அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. இவை வேலையாளர் சமுதாயம் தாம் எதிர்பார்க்கின்ற வசதிகள் மற்றும் நன்மைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளத் தேவையான சட்ட பாதுகாப்பை வழங்கும் நோக்கத்தோடு செயற்படுகின்றன.

## தொலைநோக்கு

சர்வதேச ரீதியில் போட்டித்தன்மையான பொருளாதாரமொன்றிற்கான நிரந்தரமான தொழிற்துறை அமைதியுடன் கூடிய நாடொன்று.

## செயற்பணி

பாதுகாப்பான தொழிற்றுறை அமைதிக்குள் சீரிய வேலைச் சூழலொன்றினைத் தாபிப்பதன் ஊடாக இலங்கையின் அபிவிருத்திச் செயல்முறைக்குப் பங்களிப்பு செய்தல்.

## திணைக்களத்தின் செயற்பாடுகள்

- தொழிலாளர்களின் நலன்கள் மற்றும் அபிவிருத்தியை நோக்கி தொழிற் சட்டதிட்டங்களை செயற்படுத்த முனைதல் மற்றும் கைத்தொழில் பிணக்குகளை இணக்கம் செய்தல்

- தொழிலாளர் சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட சமூக நல வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தல்.

- தொழிற்துறை தொடர்பாக அளவீடுகளை நடத்துதல். தொழில் துறையில் அபிவிருத்தி மற்றும் தொழிலாளர் சமூகத்தினுடைய முன்னேற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்களை அடையாளம் காணுதல்,கல்வி மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுதலும் நடைமுறைப்படுத்துதலும்.

- தொழில் துறைக்கு உரிய திறத்தவர்களிடையே சமூகக் கலந்துரையாடலை அபிவிருத்தி செய்தல்

- தொழில் துறைக்குரிய புள்ளிவிபரங்களைச் சேகரித்தல் பகுப்பாய்வு செய்தல் மற்றும் சமர்ப்பித்தல்.

- தொழிற்சங்கங்களுடனான உறவினை நல்ல நிலையில் மற்றும் உயிரோட்டமான முறையில் பேணிச் செல்லுதல்

- சர்வதேச தொழில் தாபனத்தில் இலங்கையின் பிரதிநிதியென்ற வகையில் தொழில் மற்றும் தொழிற்சங்கங்கள் உறவுகள் அமைச்சுடன் ஒத்துழைப்புடனும் மற்றும் உயிரோட்டமான வகையிலும் செயற்படுதல்.

## நிலையான கைத்தொழில் அமைதியை நோக்கி எடுக்கப்படும் முயற்சி

அரச முயற்சியாண்மைகளிலும் பார்க்க தனியார் துறை முயற்சியாண்மைகளில் மேலதிக கவனம் செலுத்தியுள்ள பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றும் இப்போதைய அரசு பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப தனியார்துறையின் உந்து சக்தியாகக் கருதப்படும் தனியார்துறை ஊழியர் சமூகத்திற்கு முக்கியம் அளிக்கிறது. அது அவர்களுடைய பயனுள்ள சேவை தனியார் துறையை வினைத்திறன் உடையதாக்குவதனூடாக பொருளாதார முன்னேற்றத்திற்கு காரணமாக அமைவதனாலாகும்.

இந்த நிலைமைகளின் அடிப்படையில் தனியார்துறை ஊழியர் சமூகத்திற்கு கடந்த காலத்தில் இருந்ததிலும் பார்க்க அதிகளவு விருத்தியடைந்த பெறுமதிமிக்க முக்கியத்துவம் பெறுவதனைத் தவிர்க்க முடியாததாகவுள்ளது. இதற்கேற்ப தனியார்துறை ஊழிய சமூகத்தினருடைய வினைத்திறனை அபிவிருத்தி செய்வதன் மூலம் எதிர்பார்த்த பொருளாதார நோக்கினை வெற்றி கொள்வதற்காக பேணப்படும் இயலுமை மேலும் அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளது. அவ்வகையான சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும் தனியார் துறையை பலமடையச் செய்வதனை நோக்கிச் செயற்படும் ஒரேயொரு அரச திணைக்களமாக அடையாளம் காணக்கூடிதாகவுள்ள தொழில் திணைக்களத்தின் வகிபாகம் மேலும் விரிவடைந்துள்ளது.

அக்கருத்தின் நோக்கில் செயற்படுகையில் நல்லதொரு கைத்தொழில் அமைதியை நிரந்தரமாகப் பேணுதல், நிறுவனத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளினை வெற்றிகொள்வதுடன் நாடுபூராகவும் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல கைத்தொழில் அமைதியை பேணுவது, எதிர்பார்த்த பொருளாதார நோக்கினை வெற்றி கொள்வது, இறுதியில் உறுதியான அபிவிருத்தியின் வெற்றியை உரித்தாக்குவதற்கு முழு இலங்கை மக்களுக்கும் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இதற்கு ஏற்ப விசாரித்துப் பார்த்த போது நல்ல கைத்தொழில் அமைதியை நாட்டில் ஏற்படுத்திப் பேணுதல் நாட்டின் முக்கிய தேவைப்பாட்டின் ஒரு பகுதியாகக் குறிப்பிட முடியும்.

தொழிற்சாலையினுள் அதேபோன்று வேலைத்தலத்தினுள் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கும் ஊழியர் படை போன்று, அந்த தொழிற்சாலை, வேலைத்தளம் மற்றும் சேவை வழங்கும் நிறுவனத்தினை நிருவாகம் செய்யும் மற்றும் அவற்றினை நிர்வகிக்கும் தொழில்தருநர்களின் நல்ல ஒத்துழைப்புடனும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் செயற்படுவதன் மூலம் தொழில்தருநர் தொழிலாளர்கள் பிணக்குகளைக் குறைத்தல், அந்தப் பிணக்குகளை நீண்ட தூரத்திற்கு செல்வதனைத் தடுத்து, வேலை நிறுத்தத்திற்கு செல்வதற்கு இடமளிக்காது மேலும் அமைதியான வகையில் சேவை நிலையங்களில் நாளாந்த நடவடிக்கைகளை பேணிச் செல்வதனூடாக ஏற்படுத்தப்படும் சமாதானத்தை நிலை நிறுத்தும் சூழ்நிலை முதலாவதாகவும், நிறுவன அபிவிருத்தியை நோக்கியும், இறுதியாக இலங்கைத் தீவின் எதிர்பார்த்த அபிவிருத்தி நிலைமையை


அடைவதற்கு அடிப்படையாகவுள்ள நோக்கினை நிறைவேற்ற முக்கிய காரணியாகவும் குறிப்பிட முடியும்.

தேசிய ரீதியாக முக்கியமாக நிலை நிறுத்துகின்ற இவைபோன்ற பொறுப்புடைய கடமையை நிறைவேற்றுதவற்கு தொழில்தருநர் தொழிலாளர்களாகிய இருதிறத்தவர்கடையே நல்ல உறவுகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஏற்றுக்கொள்ளக் கூடிய, சட்ட ரீதியான பலமுடைய, அதிகாரமுள்ள அரச நிறுவனமாக தொழிற்றிணைக்களம் அடையாளம் காணக்கூடியதாக இருப்பதுடன், அந்த நல்ல விடயத்திற்குப் பங்களிப்பு செய்த தொழில் திணைக்களத்தின் தொடர்பினை நிரூபிக்கக் கூடிய வகையில் சேவையை நிறைவேற்றுவதில் அதனுடைய பல்வேறு பிரிவுகளினூடாக 2015ஆம் ஆண்டில் நாடு பூராகவும் நிறைவேற்றியுள்ள சேவைக்குரித்தான சகல விபரங்கள் மற்றும் நடவடிக்கைகள் பின்வருமாறு.

## 02. தொழில் பரிசோதனைகள்

எந்தவொரு நாட்டிலும் எதிர்பார்த்த அபிவிருத்தியினை அடைவதனை நோக்காகக் கொண்டு அந்த நாட்டினுள் திருப்தியளிக்கக் கூடிய வகையில் ஊழியப்படையொன்று பேணப்படுவது அத்தியாவசியமாகின்றது. அந்த நம்பிக்கையின் நோக்கில் முழு நாட்டினுள்ளும் நல்ல தொழில் அமைதியை பேணிச் செல்வதற்கு தொழில் திணைக்களத்தின் அலுவலர்களினால் நாடு பூராகவும் மேற்கொள்ளப்படும் தொழில் பரிசோதனைகள் நாட்டின் விளைதிறனை மேம்படுத்துவதற்கு காரணம் என்பது தெளிவாகியுள்ளது. அதேபோன்று, தொழில் பரிசோதனைகள் செய்யப்படாவிடின் கைத்தொழில் பிணக்குகள் அதிகரித்து இடைவிடாது வேலை நிறுத்த நிலைமை ஏற்பட்டு, தொழில் அமைதி சீர்குலைந்து, விளைதிறன் குறைவான மட்டத்திற்கு வருவதற்கான சான்றுகளுள்ளன.

கடந்த ஐந்து வருடகாலத்தினுள் செய்யப்பட்ட தொழில் பரிசோனைகள் மற்றும் அறிக்கையிடப்பட்ட கைத்தொழில் பிணக்குகளின் புள்ளி விபரங்கள்.




தொழில் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளினூடாக செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் கைத்தொழில் பிணக்குகளின் அளவு இவ்வாறு குறைவடைவதில் செல்வாக்குச் செலுத்தியிருப்பதுடன், அவை தொடர்பாக ஆராய்ந்தபோது, நிதர்சனமான காரணமாக தொழில் பரிசோதனைகளின் தரம் அதுபோன்று அளவு என்பவை உயர்வடைந்து, பலமடையச் செய்ய தொழில் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளினால் மக்கள் ஊடகங்களின் உதவியைப் பெற்று செய்யப்பட்ட பல்வேறு அறிவூட்டல் வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தியமை ஆகிய விடயங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

வலய மட்டங்களில் நடாத்தப்படும் முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்கள் அதிகளவு ஒருங்கமைக்கப்பட்ட முறையில் நடாத்துதல் ஊடாக, அலுவலர்களினால் செய்யப்படும் தொழில் பரிசோதனைகள் தொடர்பாக மேலும் அதிகளவு கவனம்

செலுத்தப்படுவதுடன்,அதனூடாக தொழில் அலுவலர்களின் பலவீனங்கள், குறைபாடுகள்,என்பவற்றை நன்றாகப் புரிந்துகொண்டு அந்த நிலைமையைக் குறைப்பதற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் பெற்றுக்கொடுக்கப்படுவதுடன், மேற்குறிப்பிட்ட குறிக்கோளினை வெற்றி கொள்வதற்கு, 2015 ஆம் ஆண்டில் நாடு பூராகவும் நடாத்தப்பட்ட ஆய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை ஐந்தாக (05) உள்ளது.

## கைத்தொழில் அமைதிக்கு சமூகக் கலந்துரையாடல் பிரிவின் பங்களிப்பு

தொழில்தருநர்கள், தொழிலாளர்களாகிய இரு திறத்தவர்களிடையே நல்ல உறவு, பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் பொருட்டு தீர்மானம் எடுக்கும் நடவடிக்கையை மேலும் தெளிவான தன்மையுடன் பேணிச் செல்வதற்கு அவர்களிடையே நல்ல கலந்துரையாடலை விருத்தி செய்தல், அதனூடாக கூட்டுறவினை மேம்படுத்துதல், வருட இறுதியில் அந்த முன்மொழியப்பட்ட முறைகளுக்கு ஏற்ப சகல நிறுவனங்களினதும் விளைதிறனை விருத்தி செய்த நிறுவனத்தினை சரியான நடைமுறைகளுக்கு ஏற்ப மதிப்பிடுதல், வெகுமதி வழங்குதல் இப்பிரிவின் முக்கிய நடவடிக்கைகளாக அடையாளம் காணக்கூடியதாகவுள்ளது.

கலந்துரையாடல் மற்றும் கூட்டுறவினை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு மாவட்ட மற்றும் வலய மட்டங்களில் செயல்திறன் கொண்ட ஆலோசனைக் குழுக்களை நிறுவுவதனூடாக முத்தரப்பு முறையினுள் தீர்மானம் எடுப்பதன் பொருட்டு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துவதனூடாக நல்ல வேலைச் சுற்றாடலொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பது இந்தப் பிரிவின் அடிப்படை நோக்கமாகும்.

## 2015ஆம் ஆண்டில் சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள கூட்டுறவு அலகினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| | | |
|---|---|---|
| சமூகக்கலந்துரையாடல் பிரிவினூடாக | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் எண்ணிக்கை | 80 |
| | பங்குபற்றிய தொழிலாளர்களின் எண்ணிக்கை | 4,403 |
| வலய, மாவட்ட மற்றும் உப அலுவலகங்களின் ஊடாக | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் எண்ணிக்கை | 116 |
| | பங்குபற்றிய தொழிலாளர்களின் எண்ணிக்கை | 4,094 |

நாடு பூராகவும் சமூகக் கலந்துரையாடல் விசேட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக, சமூகக் கலந்துரையாடல் பிரிவினால் வருடந்தோறும் நடாத்தப்படும் விளைதிறன் வெகுமதி வழங்கும் உற்சவம் இம்முறையும் அதிமேன்மை தங்கிய சனாதிபதியின் தலைமையில் 2015.12.17 ஆந் திகதி தாமரைத்தடாக நாடக அரங்கிலும் இலங்கை மன்றக் கல்லூரியில்கண்காட்சியும் நடைபெற்றதுடன், அதில் பாரிய அளவு, மத்திய அளவு மற்றும் குறைந்தளவு மட்டத்தில் பெருந்தோட்டம், சேவை, ஆடை, உற்பத்தி ஆகிய நான்கு பிரிவின் பொருட்டு வெற்றியாளர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குவெகுமதி மற்றும் சான்றுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. இலங்கை ஊழியர் சமூகத்தினரின் திறமைகளை வெளிப்படுத்துவதனைக் கருத்தில் கொண்டு நடாத்தப்பட்ட சித்திரம், கட்டுரை (சிங்களம்/ தமிழ்), கவிதை (சிங்களம் / தமிழ்), சுவரொட்டிகள், குறுகிய வீடியோ திரைப்படம் ஆகிய ஏழு பிரிவுகள் தொடர்பாக போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் பகிர்ந்தளிப்பது இடம்பெற்றது.

## 2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற வேலை நிறுத்தங்கள்

அரசு மருவிய சார்ந்ததுறை மற்றும் தனியார்துறை ஊழியர் சமூகத்தினால் 2015ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வேலைநிறுத்தத்தின் எண்ணிக்கையாக 36 அறிக்கையிடப்பட்டுள்ளன. அந்த வேலை நிறுத்தங்களில் பங்கு பற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை 8400 ஆக இருப்பதுடன் அந்த வேலை நிறுத்தங்களின் காரணமாக இழக்கப்பட்ட மனித தினங்களின் எண்ணிக்கை 38,373 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2015ஆம் ஆண்டில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவின் நடவடிக்கைகள்

தொழிற்றிணைக்களத்தின் சட்டநடவடிக்கைகளை நெறிப்படுத்துதல் இந்தப் பிரிவின் நடவடிக்கைகளாகக் காணக்கூடியதாக உள்ளது. திணைக்களம் மற்றும் அது தொடர்பான சட்ட நடவடிக்கைளின்போது தொழில் ஆணையாளர் அதிபதியினை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், அவை தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளின்போது சட்டமா அதிபருக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படும் மிகவும் முக்கிய தொழிற்பாடாக அடையாளம் காணக்கூடியதாக உள்ளது.

தன்னிச்சையான போக்கினைப் பின்பற்றும் தொழில்தருநர்கள் மற்றும் தொழிலாளர்களைஊக்கப்படுத்தும் நோக்கில் குறைந்தளவு சட்ட ஏற்பாடுகளைநடைமுறைப்படுத்துவதில், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவு தொடர்ந்து கவனத்தினைச் செலுத்துகின்றது.

2015ஆம் ஆண்டில் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பிரிவு தாக்கல் செய்த வழக்குகளின் எண்ணிக்கை கடந்த 2014ஆம் ஆண்டிலும் பார்க்க பலதுறைகளிலும் அதிகரித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளதுடன் அவை பணிக்கொடைக் கொடுப்பனவுச்

சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையினதும் (2044), ஊ.சே.நி. சட்ட வழக்குகளின் எண்ணிக்கயையினதும் (3246) வெளிப்பாடாகும்.

## தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை

| **சட்டம்** | **2014** | **2015** |
|---|---|---|
| பணிக்கொடைக் கொடுப்பனவுச்சட்டம் | 2,044 | 2,524 |
| கைத்தொழில் பிணைக்குகள் சட்டம் | 146 | 153 |
| சேவை முடிவுறுத்தல் சட்டம் | 36 | 49 |
| சம்பளச் சபைக்கட்டளைச் சட்டம் | 244 | 282 |
| கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம | 88 | 99 |
| மகப்பேற்றுக்கட்டளைச் சட்டம் | 03 | 03 |
| பெண்கள், இளம் ஆட்கள் மற்றும சிறுவர்களைத் தொழில் அமர்த்துதல் தொடர்பான சட்டம் | 11 | 05 |
| ஊழியர் சேமலாபநிதிச் சட்டம் | 3,244 | 2,336 |
| தொழில் நியாய சபைக்கட்டளைகள் | 183 | 164 |
| வரவு செலவுத்திட்ட நிவாரணப்படி கொடுப்பனவுச் சட்டம் | 32 | 29 |
| அங்கீகரிக்கப்பட்ட சேமலாபநிதி | 07 | 03 |

## விசேடப் புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள்

கைத்தொழில் அமைதி சீர்குலையும்போது மத்தியஸ்தம் செய்து வைப்பது போன்று சிற்சில மிகவும் விசேடமான கைத்தொழில் மற்றும் சேவைகள் தொடர்பாக தற்காலிகமாக கையளிக்கப்படும் திட்டங்கள் தொடர்பாக மத்தியஸ்தம் வகித்தல், விசேடப் புலனாய்வுப் பிரிவினால் செய்யப்படுவதாகும். முறைபாட்டுப் பரிசோதனைகள் மற்றும் நிறுவனச் சோதனைகள் நடவடிக்கையின் பொருட்டு வலய அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்கள் வலையமைப்பொன்று நாடு பூராகவும் பேணப்படுவதுடன் கீழ்குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களில் இந்தப் பிரிவு அது தொடர்பாக மத்தியஸ்தம் வகிக்கும்.

I. தொழிற்சட்டங்கள் மற்றும் எற்பாடுகளின் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு அவசர விசாரணைகள் மற்றும் விசேட பரிசோதனைகளை மேற்கொள்ளுதலை விசேடப் புலனாய்வின் கடமை நடவடிக்கைளில் சேர்த்துக்கொள்ளுதல்.

II. தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு, தொழில் ஆணையாளர் அதிபதி, மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி என்பவர்களினால் சமர்ப்பிக்கப்படும் மக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக விரைவாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

III. மனித உரிமைகள் ஆணைக்குழு, பாராளுமன்ற ஆலோசனைக் குழு மக்கள் முறைப்பாட்டுக் குழு போன்ற நிறுவனங்களினால் மக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் செய்யப்படும் விசாரணையின் பொருட்டு விடையளித்தல்.

IV. திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளுடன் சேர்ந்து ஒன்றிணைந்த பரிசோதனை நடவடிக்கைச் செயற்பாட்டினை மேம்படுத்தல்.

V. மக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக மாவட்ட, உப அலுவலகம் மற்றும் வலய தொழில் அலுவலகங்களிலிருந்து அறிக்கையினை கோருதல்.

VI. சட்ட ரீதியாகக் கணிப்பிட்டவற்றை அறவிடுவதன் பொருட்டு சட்டநடவடிக்கை எடுத்தல்.

## விசேடபுலனாய்வுப் பிரிவின் முன்னேற்றம்.

| | |
|---|---|
| கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 292 |
| கணக்கிடப்பட்ட ஊழியர் சேமலாபநிதி நிலுவைத் தொகை ரூபா (000) | 634,968,795 |
| கணக்கிடப்பட்ட சட்டரீதியான கொடுப்பனவுகளின் நிலுவைத்தொகை ரூபா(000) | 4,995,760 |

# 03. சம்பளம், சேவை நிபந்தனைகளினூடாக ஊழியர்கள் சமூகத்தின் பாதுகாப்பு

## ஊழியர்களைப் பாதுகாக்கும் வகையில் சம்பளம், சேவை நிபந்தனைகள்

தனியார் துறையில் சேவையிலீடுபட்டுள்ள ஊழியர்களின் வாழ்க்கை நிலைமையை மேலும் பாதுகாக்கும் நோக்கில், அவர்களுடைய மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களுடைய எதிர்காலத்தினை வளமாக்குவதை நோக்கமாகக் கொண்டு அந்த ஊழியர் குழாத்தினால் செய்யப்படும் ஊழியத்திற்கு ஏற்ப சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்கும் குறிக்கோளுடன், இருதிறத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சேவை நிபந்தனைகளை சட்ட ரீதியாக தயாரிப்பதன் மூலம், ஊழியத்தைச் சுரண்டுவதற்கு இடமளிக்காது, தொழில்தருநர்கள், தொழிலாளர்கள் ஆகிய இருதிறத்தவர்களிடையே நல்லுறவினை விருத்தியடையச் செய்யும் நோக்கில் செயற்படும் இந்தப் பிரிவின் நடவடிக்கைகளின் இறுதி இலக்காக அமைவது, நல்லதொரு கைத்தொழில் சமாதானத்தை நாட்டினுள் கட்டியெழுப்பி இலங்கை முழுவதும் விளைத்திறனை மேம்பாடடையச் செய்வதாகும். இவ்வாறான பொறுப்பான செயற்பாடுகளை நெறிப்படுத்தும் தொழிற்தரப்பிரிவு தொழிற்றிணைக்களத்திலிருக்கும் செயற்படும் பிரிவொன்றாக அடையாளப்படுத்த முடிகின்றது. இந்தப் பிரிவின் கீழ் செயற்படுத்தப்படும் சட்டங்களாவன:

I. 1941ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்.

II. 1954 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கடை அலுவலக ஊழியர்கள் தொடர்பான சேவை மற்றும் வேதனத்தை ஒழுங்கபடுத்துதல் சட்டம்.

III. 2005 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வேலையாட்களின் வரவு செலவுத்திட்ட நிவாரணப்படி கொடுப்பனவுச் சட்டம்

## தொழிற்தரப் பிரிவின் செயற்பாடுகள்

I. 2014 ஆண்டில் 16 சம்பளச் சபைகளுக்கு நியமிக்கப்பட்டிருக்க வேண்டிய உறுப்பினர்களை நியமித்தல்.

II. 2015 ஆம் ஆண்டினுள் சம்பள அதிகரிப்புக்களைச் செய்வதற்கு எண்ணியுள்ள சம்பளச்சபைத் தீர்மானங்கள் தொடர்பாக ஆட்சேபனைகளைக் கோருதல்.

III. 2015 ஆம் ஆண்டில் வெற்றிடமாகவுள்ள சம்பளச் சபைக்குரிய உறுப்பினர்களை நியமனம் செய்தல்.

IV. 2015ஆம் ஆண்டில் 48 சம்பளச்சபைக் கூட்டங்களை நடாத்துதல்

V. இறப்பர் வளர்த்தல் மற்றும் தட்டை இறப்பர் தயாரித்தல், தொழில் தொடர்பாக சம்பளச் சபைகட்டளையை பிரசுரித்தல் அத்துடன் அத்தொழிலுக்குரிய சேவை நிபந்தனைகளைத் தயாரித்தல்.

VI. கொக்கோ, ஏலக்காய், மிளகு வளர்த்தல் மற்றும் உற்பத்தி செய்தல் தொழிலுக்கான சம்பள விபரத்தை மாதாந்தம் வெளியிடுதல்

VII. கப்பல் நிறுத்துமிடங்கள் மற்றம் துறைமுக போக்குவரத்து தொழில் தொடர்பான சம்பளச் சபைக்கட்டளையைத் தயாரித்தல்.

VIII. சம்பளச்சபைக்கு வருகை தரும் உறுப்பினர்களின் வருகைக்கான கொடுப்பனவினை அதிகரிப்பதற்கான கட்டளையைப் பெயரிட்டு பாராளுமன்ற அங்கீகாரத்திற்குச் சமர்ப்பித்தல்.

# 04. சமூகப் பாதுகாப்பினை நோக்கிச் செயற்படும் நிகழ்ச்சித் திட்டம்


## ஊழியர் சேமலாபநிதியம்

ஊழியர் சேமலாபநிதி என்பது இந்த நாட்டின் தனியார்துறை மற்றும் மருவிய அரசுசார்துறையில் சேவையிலீடுபட்டிருக்கும் சகல ஊழியர்களுக்கும் ஓய்வு கால வாழ்க்கையை நல்லமுறையில் கழிப்பதற்குக் கைகொடுக்கும் நோக்குடன் 1958 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாபநிதி சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப 1958 ஆம் ஆண்டின் யூன் மாதம் 01 ஆந் திகதி முதல் செயற்பட்டு வரும் முக்கிய சமூகப்பாதுகாப்பு முறையாக சுட்டிக் காட்ட முடியும்.

ஊழியர் சேமலாபநிதிச் சட்டம் 1958ஆம் ஆண்டு யூன் மாதம் 01ஆந் திகதி தொடக்கம் அந்தச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப இந்த நிதியத்திற்குரிய நிருவாக நடவடிக்கைகள் தொழில் ஆணையாளர் அதிபதியாலும், நிதியத்திற்குரிய நிதி நிருவாக நடவடிக்கைள் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

ஊழியர்களின் மாதச் சம்பளத்தில் 8% மான சதவீதமும் தொழில்தருநர்களினால் 12% மான சதவீதமும் ஒன்று சேர்க்கப்பட்டு ஊழியரின் பெயரில் மாதம் தோறும் வங்கியில் வைப்பிலிடுவதன் மூலம் ஊழியர்களுடைய ஊழியர் சேமலாபநிதி நிலுவை அதிகரிப்பதுடன் சில நிறுவனங்களினால் ஊழியர் சேமலாப நிதி உதவு தொகை ஊழியருடைய மாதச் சம்பளத்தின் 10%மும் தொழில் தருநரினால் 15%மும் செலுத்தப்படும் சந்தர்ப்பங்களும் இடம்பெறுகின்றன.

## கடந்த ஐந்து வருடகாலத்தினுள் உதவு தொகை சேகரிப்பின் முன்னேற்றம்




## 2015 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியினூடாக நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்


ஊழியர் சேமலாபநிதி கண்காணிப்புத் தகவல் முறைமை தற்போது சகல மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக ஊழியர் சேமலாபநிதி கண்காணிப்புத் தகவல் முறைமையூடாக மாவட்ட மற்றும் உபஅலுவலகங்களினால் தொழில்தருநர்களின் நிறுவனங்களுக்குரிய நிலுவைத் தொகையைக் கணிப்பிடுதல் மற்றும் அறிவித்தல் வழங்குதல் போன்று ஊழியர் சேமலாபநிதி நிலுவையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இந்த தகவல் முறைமை அமைக்கப்பட்ட பின்னர் ஊழியர் சேமலாபநிதியின் நடவடிக்கைகளில் முன்னேற்றத்தைக் காணக் கூடிதாகவுள்ளது.

ஊழியர் சேமலாபநிதி செலுத்தும் தரவு முறைமை இப்பொழுது சகல மாவட்டக் காரியலயங்களிலும் நிறுவப்பட்டுள்ளதுடன், உப அலவலகங்களான நாவலப்பிட்டிய, பெலியத்த, மன்னார், மஹியங்கனை மற்றும் மொரவக்க அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் முழு ஊ.சே.நி நன்மைகளைப் பெறுவதன் பொருட்டு 2015 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் 127,107 தொடர்பாக வழங்குவதற்கான கட்டளை வழங்கப்பட்டு 77,769 மில்லியன் ரூபா நன்மைகளாக வழங்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டின் நலன்களைப் பெற்றவர்களின் எண்ணிக்கை மற்றும் மீளளிக்கப்பட்ட நலன்கள்



இலங்கையில் தனியார் துறை மற்றும் மருவிய அரசுசார் துறையைப் பிரதிநிதித்துவம் செய்யும் முழு ஊழியச் சமூகத்திற்கும் சொந்த சமூகப் பாதுகாப்புக் கருதி பொறுப்புள்ள செயற்பாட்டினை நிறைவேற்றும் ஊழியர் சேமலாபநிதிப் பிரிவு தொழிற்றிணைக்களத்திலுள்ள முக்கிய பிரிவாக எவ்வித கேள்விக்கும் உட்படாது அடையாளம் காணக் கூடியதாக உள்ளது.

அதுமட்டுமன்றி 2015ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியின் பொருட்டு 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக்காலத்தினுடைய ஊழியர் சேமலாப நிதிக் கணக்கில் ரூபா மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட தொகை மற்றும் தற்போது ஊழியர் சேமலாபநிதிக்கு உதவு தொகை செலுத்தும் அங்கத்தவர்களுக்கு வீடமைப்பு மற்றும் உடல் ஆரோக்கிய நோக்கத்திற்காக அங்கத்துவ நிலுவையில் 30%ஆன தொகையை நன்மையாக வழங்கும் செயற்றிட்டம் மிகவும் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகின்றது.

## 2015.12.31 ஆந் திகதியன்று 30% முன்மொழிவுத் திட்டத்தின் முன்னேற்றம்

| | இதுவரை கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை | அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் எண்ணிக்கை | கையளிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் எண்ணிக்கை | அனுப்பப்பட்டு இதுவரை கையளிகப் படாத விண்ணப்பப் படிவத்தின் எண்ணிக்கை | நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருக் கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தீர்மானிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை | கையிலிருப்பில் உள்ளவற்றின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | 70,839 | 46,594 | 12873 | 33,721 | 3,352 | 9521 | 24,245 |
| மற்றைய அலுவலகங்களில் இருந்து | - | - | 912 | - | | 404 | |

## 05. பெண்கள் மற்றும் சிறுவர்கள் நடவடிக்கைகளுக்கான பங்களிப்பு

### பெண்களையும் சிறுவர்களையும் அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையின் ஊழியப்படையில் குறிப்பிடக்கூடிய சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் ஊழியர்கள் சகல உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் விசேட பங்களிப்பினைச் செய்வது வெளிநாட்டுச் செலவாணி உழைப்புக்களில் முதலிடம் பெறும் பிரிவுகளிடையே பெண்களின் ஊழியப் பங்களிப்புடன் செய்யப்படும் ஆடை உற்பத்தி போன்ற உற்பத்திகளினால் நிரூபணமாகின்றது. இவ்வாறு சேவையை நிறைவேற்ற வேலை செய்யும் பெண்களுடைய தொழில் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு போன்று பெண்களுக்கு அவர்களுடைய சுகாதாரம், நலன்கள் தொடர்பாக வசதிகள் மற்றும் சலுகைகள் போன்றவற்றினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு சட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அதேபோன்று பாராயமடையாத சிறுவர்களை வீட்டுவேலைகள் மற்றும் ஏனைய அபாயகரமான வேலைகளில் ஈடுபடுத்தும் பிரச்சினைக்குத் தீர்வாக சிறுவர் ஊழியத்தினை தவிர்த்தலை அடிப்படையாகக் கொண்ட குறிக்கோளுக்கு ஏற்ப மாவட்ட தொழில் அலுவலகங்களுடன் ஒன்றிணைந்து பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இப்பிரிவினால் செயற்படுத்தப்படும் சட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

I. 1956 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க பெண்கள் இளைஞர்கள் மற்றும் சிறுவர்களைத் தொழிலில் அமர்த்துதல் சட்டம்.

II. 1939 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க மகப்பேற்று கட்டளைச் சட்டம்

III. 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கக் கடை காரியால ஊழியர் சட்டத்தில் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்குரிய 2,18 ஆம் பிரிவுகள்

IV. 1945ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தில் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்குரிய பிரிவுகள்

அதேபோன்று 2015 ஆம் ஆண்டில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக விசேடமான நடவடிக்கைகளுக்குத் தொழிற்திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் நடவடிக்கைள் பிரிவினூடான பங்களிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**1. சர்வதேச மகளிர் தினம் 2015.03.08**

கட்டுநாயக்கா, பியகம, கொக்கலை முதலீட்டு அபிவிருத்தி வலயத்திற்குரிய மாதிரி விடுதியில் வதிபவர்களிடையே பாடும் திறமையை காண்பிக்கும் ஐவரைத் தெரிவு செய்து சர்வதேச மகளிர் தினத்தில் தொழில் திணைக்களத்தில் நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டத்தில் வெற்றியாளர்களைத் தெரிவு செய்து பரிசில்களும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

**2. சர்வதேச சிறுவர்கள் ஊழியர் எதிர்ப்புத்தினம்**

2015.06.12 ஆந் திகதி இடம்பெறும் சர்வதேச சிறுவர்கள் ஊழிய எதிர்ப்புத்தினத்தின் பொருட்டு தொழில் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் கொண்டாடப்பட்ட சர்வதேச சிறுவர்கள் ஊழிய எதிர்ப்புத்தினத்தினைக் கொண்டாடும் முகமாக தபால் முத்திரையொன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. அதேபோன்று இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 22 மாவட்டங்களில் (இரத்தினபுரி, கோலை, அம்பாறை தவிர்ந்த) சிறுவர்கள் ஊழியமற்ற வலயமாக நிறுவதற்கு நாடு பூராகவும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

**3. உலக சிறுவர்கள் தினத்தினைக் கொண்டாடுதல்**

2015.10.01 ஆந் திகதி இடம்பெறும் உலக சிறுவர் தினத்தன்று 2016 ஆம் ஆண்டு சிறுவர்கள் ஊழியமற்ற (சிறுவர்கள் ஊழியத்தை சூனிய நிலைமைக்குக் கொண்டு வருதல்) இலங்கையைத் தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக ஊவா, வடக்கு மற்றும் மேல் மாகாணங்களில் நடைபவனிகள் மூன்று நடத்தப்பட்டுள்ளன.

**4. ஆபத்தான சிறுவர்கள் ஊழியத்தை ஒழித்தல்**

ஆபத்தான சிறுவர்கள் ஊழியத்தை ஒழித்தலின் பொருட்டு பாடசாலைச் சிறுவர்களை அறிவூட்டும் 51 நிகழ்ச்சித்திட்டங்கள் நாடுபூராவும் நடாத்தப்பட்டுள்ளன.

**5. சிறுவர்கள் ஊழியமற்ற வலயத்தினை நிறுவும் வேலைத்திட்டம்**

மேற்கூறிய வேலைத்திட்டத்தின் கீழ் வலயத்திற்குப் பொறுப்பான பிரதித் தொழில் ஆணையாளர்களை அறிவூட்டுதல், அவர்களினூடாக கிராம சேவையாளர்கள் மற்றும் சிறுவர்கள் உரிமைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் நன்னடத்தை அலுவலர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இவை தவிர தொழில் புரியும் பெண்களை அறிவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் பெருந்தோட்டத்துறையில் பெண் தொழிலாளர்களின் பொருட்டு தொழில்புரியும் பெண்களுக்கு உரித்தாகும் சட்டங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு சட்டங்கள் தொடர்பாக 08 நிகழ்ச்சித் திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளதுடன் தொழிற்சாலைப்

பெண் ஊழியர்களுக்காக மேற்கூறிய தலைப்பின் கீழ் பெண் ஊழியர்களுக்கு 19 கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக முதலீட்டு அபிவிருத்தி வலயத்தில் நடாத்தப்படும் மனவளக்கலை விரிவுரைகள் நிகழ்ச்சித்திட்டம் 15 நடாத்தப்பட்டுள்ளன.

பெண்களை இரவு வேலையில் ஈடுபடுத்துவதற்கான அனுமதி வழங்குவது தொடர்பாக மாவட்டத்தொழில் அலுவலகம் மற்றும் ஒன்றிணைந்த பரிசோதனைகள் 19 உம் செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிமாக பெண் தொழிலாளர்கள் முறைப்பாடுகள் உரிய மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து விசாரிக்கப்படுவதுடன் மகப்பேற்று முறைப்பாடுகள் செய்யப்பட்ட பின் அவற்றினைப் பரிசோதித்து தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று சிறுவர் தொழிலாளர்கள் சேவை தொடர்பான முறைப்பாடுகள் செய்யப்பட்ட பின்னர் விசாரணை நடாத்துதல், பெண்கள் மற்றும் சிறுவர்கள் நடவடிக்கைப் பிரிவனால் 2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ள சேவையாக காண்பிக்கக் கூடியதாகவுள்ளது.

## 06. பாதுகாப்பான தொழில் பொருட்டு நிறைவேற்றிய சேவைகள்

நாடு பூராகவும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழிய சமூகத்தினருடைய பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி நிலைமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் செயற்படும் பாதுகாப்பான தொழிலுக்குரிய பிரிவு மேற்கூறிய நடவடிக்கைகளை நிறைவேற்றுவதன் பொருட்டு நாடு பூராகவும் செயற்படும் மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகம் 10 இன் மூலம் முழு வேலைத்திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன.

1942 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்கத் தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் செயற்பாட்டினை மேம்படுத்துவதுடன் கடந்த காலங்களில் செய்யப்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள திருத்தங்களையும் கவனத்திலெடுத்துபாதுகாப்பான தொழிலுக்குரிய பிரிவு முழுநோக்கத்துடன் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது.

- 1946 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கத் தொழிற்சாலைகள் திருத்தச் சட்டம்
- 1961 ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கத் தொழிற்சாலைகள் திருத்தச்சட்டம்
- 1976ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கத் தொழிற்சாலைகள் திருத்தச் சட்டம்
- 1998 ஆம் ஆண்டின் 18 ஆம் ஆம் இலக்கத் தொழிற்சாலைகள் திருத்தச் சட்டம்
- 2000 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்கத் தொழிற்சாலைகள் திருத்தச் சட்டம்
- 2002 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தொழிற்சாலைகள் திருத்தச் சட்டம்

மேற்கூறிய சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப பாதுகாப்பான தொழிலுக்குரிய பிரிவினூடாக இந்த நாட்டில் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய சேவை நிலையங்களில் சேவையிலீடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான ஊழியர்களின் பொருட்டு திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் சேவைகளை கீழ்காணும் வகையில் காண்பிக்க முடியும்.

1. தொழிற்சாலைகள் பரிசோதனைகள் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை செய்தல்
2. விபத்து, முறைப்பாடு மற்றும் அபாயம் ஏற்படுதலை பரிசோதித்தல்
3. விபத்துக்களைப் பகுப்பாய்வு செய்தல்
4. தொழிற்சாலைகள் கட்டிடங்களின் வரைபடங்களுக்கு அனுமதி வழங்குதல்
5. ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் ஊழியர்களின் சுகாதாரம் தொடர்பாக தொழில்தருநர், தொழிலாளர்களாகிய இருதிறத்தவரையும் அறிவூட்டுதல்.
6. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சட்ட ரீதியான நடவடிக்கைளை எடுத்தல்
7. தேவைப்பாடுகளுக்கு ஏற்ப அதிகாரம் வாய்ந்த அலுவலர்களை நியமித்தல்.

## 2015ஆம் ஆண்டில் தொழிற்பாதுகாப்புப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள்

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | **26,198** |
| செய்யப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | **5,090** |
| தொழிற்சாலைப்பரிசோதனை பொறியியலாளர்களின் எண்ணிக்கை | **28** |
| திட்டப்படவரைவினை அனுமதித்தல் | **130** |
| நடத்தப்பட்ட விரிவுரைகள், கூட்டங்களின் எண்ணிக்கை | **205** |

- தொழிற்சாலை பரிசோதனை பொறியிலாளருக்கான, போராதனைப் பல்கலைக் கழகத்தினூடாக கொதிகலன் சம்பந்தப்பட்ட தொழில் தொடர்பான விசேட அறிவு மற்றும் திறமையும் அனுபவமும் வாய்ந்த விசேட இந்தியப் பயிற்றுவிப்பாளர்களினால் நடாத்தப்பட்ட கொதிகலன் பயிற்சி வேலைத்திட்டம்

- அவிசாவளை முதலீட்டுச் சபைக்கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற. ‘‘உலகப் பாதுகாப்புத் தினத்தின்’’ பொருட்டு நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறை (2015.04.08)
- அவிசாவளை முதலீட்டுச் சபைக் கேட்போர் கூடத்தில் ‘‘தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தின்’’ பொருட்டு நடத்தப்பட்ட தேசிய மட்டக் கருத்தரங்கு (2015.10.13)

- நாரஹேன்பிட்டி தொழில் தலைமை அலுவலகத்தில் நடாத்தப்பட்ட வேலைப்பட்டறை (2015.11.17)

- 2015.10.30 ஆந் திகதி, பொகவந்தலாவை தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தில் நடாத்தப்பட்ட வேலைப்பட்டறை

- 2015.11.27 ஆந்த திகதி அநுராதபுரத்திலுள்ள அறுவடையின் பின்னரான தொழில் நுட்பம் தொடர்பான நிறுவகத்தில் நடாத்தப்பட்ட வேலைப்பட்டறை

- பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலையை விருத்தி செய்யும் நோக்குடன் கையேடுகள் 24,000 அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டது.

## தொழிற் சுகாதாரப்பிரிவு

இலங்கை முழுவதும் இருக்கும் பல்வேறுபட்ட தொழிற்சாலைகளில் சேவையில் அமர்த்தப்பட்டிருக்கும் பொரும்பான்மையான ஊழியர்கள் சமூகத்திற்கு உரித்தாகும் தொழில் ரீதியான விபத்து, தொழில்சார் நோய் மற்றும் சேவை புரியும் நிலையங்களின் நடவடிக்கைகளுடன் தொடர்பாக இடம்பெறும் தீங்கு விளைவிக்கக்கூடிய தொழில் சூழ்நிலை காரணமாக ஏற்படும் தீங்கு விளைவிக்கக்கூடிய சுகாதார நிலைமைகளைக் குறைப்பது இந்தப்பிரிவின் முக்கியமான நடவடிக்கையாகக் குறிப்பிட முடியும்.

ஏதாவதொரு சேவை புரியும் நிலையத்தில் அல்லது தொழிற்சாலைகளின் வளவினுள் ஆபத்தற்ற மற்றும் உபத்திரவமற்ற தொழில் ரீதியான சுகாதார நிலைமையை நன்றாக பாதுகாத்து நல்ல சேவைச்சூழ்நிலை ஒன்றினை நிறுவி பேணிச்செல்வதனூடாக அந்தச்சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் ஊழியர் சமூகத்தினது தொழிற்சுகாதாரத்தினை நல்லதொரு நிலையில் பேணுவதுடன், அதன் மூலம் ஏற்படும் மூலதன நன்மைகளின் நிலைமைகள் காரணமாக சேவைத்திறமை மற்றும் வினைத்திறன் உயர்வடைவதனூடாக அந்த தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் அளவும், தரமும் உயர்வடையும். அதன் பிரதிபலன் உரிய தொழிற்சாலைகளின் இலாபம் அதிகரிக்கும். சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கும் இந்த நிலைமைகள் பொதுவானதாகும்.

தற்போது இலங்கையில் நடைமுறையில் இருக்கும் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்திற்கு ஏற்ப, தொழிலாளர்களுடைய சுதாதாரம் மற்றும் பாதுகாப்பு நிலைமைகளைப் பாதுகாப்பது சட்ட தேவைப்பாடொன்றாவதுடன் மேற்கூறிய குறிக்கோளினை வெற்றி கொள்வதன் பொருட்டு தொழில் சுகாதாரப் பகுதியினூடாக முக்கியமான நடவடிக்கைகள் பல செயற்படுத்தப்பட்டுள்ளன.

### ஆபத்து மதிப்பீடு

தொழில் சுகாதாரப் பிரிவினூடாக சேவை நிலையம் தொடர்பான தொழில் ஆபத்துக்கள், தரமானதாகவும், நிறைவானதாகவும் மதிப்பிடப்படுவதுடன், நாடு பூராகவும்

அமைக்கப்பட்டுள்ள சேவை நிலையங்களில் இடம் பெறக்கூடிய அபாயநிலைமைகள் தொடர்பாகச்செய்யப்படும் களப்பரிசோதனைகளில் கண்டறியப்படும் விடயங்கள் குறித்து ஆரம்ப விசாரணையொன்றினைச் செய்வது,பின்னர்விஞ்ஞான முறையுடனானபரிசோதனையூடாக இந்த அபாயம் தொடர்பாக நிறைவானதும் தரமானதுமான தீர்மானம் எடுக்கப்படும்.

**சுற்றுப்புற சூழ்நிலை நிலைமைகளை பரிசோதனை செய்தல்**

நாடு பூராகவும் நிறுவப்பட்டுள்ள சேவை நிலையங்களின் சுற்றுப்புற சூழ்நிலைகளில் இடம்பெறும் பௌதீக மற்றும் இரசாயன தீங்குகள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு, அது சம்பந்தமாக நடைமுறையிலுள்ள நுணுக்கமான அளவை உபகரணங்கள் உபயோகிக்கப்படும். இந்தச்சேவை இலவசமாக வழங்கப் பெறுகின்றது. இதற்கான சில பரிசோதனைகள் சேவை நிலையங்களினுள் இடம்பெறுவதுடன், சில பரிசோதனைகளுக்குரிய பகுப்பாய்வு ஆய்வுகூடங்களினூடாகச் செய்யப்படுகின்றது. வெப்பம், வெளிச்சம், ஒலி, தூசி, புகை,ஆவி,காற்று மற்றும் வாயு நிலைகளின் மட்டத்தின் அளவு தொடர்பான பரிசோதனைகள் அடிக்கடி இந்தப்பிரிவினால் செய்யப்படுகின்றன.

**உயிரியல்ரீதியான விஞ்ஞானப் பரிசோதனை**

சேவை நிலையங்களில் பேணப்படும் தீங்கான சுகாதார நிலைமைகளின் காரணமாக உண்டாகும் நோய் நொடிகளை தவிர்ப்பது இந்த உயிரியல்ரீதியான விஞ்ஞானப் பரிசோதனைகளின் அடிப்படை நோக்கமாகும். அது போன்று சேவை நிலையத்தால்வெளிவிடப்படும் சுகாதாரக் கெடுதிமிக்க கைத்தொழிற் கழிவுகளைக்குறைப்பதற்கு தேவை ஏற்படும் தொழில் தருநர்களினால் செய்யப்படும் விண்ணப்பங்களின் மீது சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொடர்ச்சியாக எதிர்பார்க்கப்படுகின்றது.

**நுரையீரல் தொழிற்பாடு தொடர்பான பரிசோதனைகள்**

விசேடமாக கீழ் குறிப்பிட்டுள்ள துறை தொடர்பான சேவையிலீடுபடும் தொழிலாளர்கள் தொடர்பாக இந்த பரிசோதனைகள் வருடம் தோறும் இடம்பெறுகின்றது.

1. அஸ்பெஸ்டஸ் மற்றும் சீமெந்து தொழில்
2. புடைவை நெய்தல் தொழில்
3. பல வகையான இரசாயன திரவியங்களை பாவிக்கும் தொழில்
4. காரீயச் சுரங்கத்துடன் தொடர்பான தொழில்

**தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான வாரம்**

சகல வருடத்திலும் ஒக்ரோபர் மாதம் இரண்டாம் வாரம் தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான வாரமாகப் பெயரிடப்பட்டிருப்பதனால் அதற்குரிய நிகழ்ச்சி திட்டங்களை நடத்துதல் இந்தப் பிரிவின் சேவைக்குரித்தானதாகும்.

**2015 ஆம் ஆண்டில் தொழில் சுகாதாரப்பிரிவினால் சகல தொழில் சூழல்களையும் நல்ல முறையில் பேணிச் செல்வதற்கு நிறைவேற்றிய சேவைகள்.**

| | | |
|---|---|---|
| 1. | தொழிற்சாலைகளினுள் நடத்திய நிலைய அளவீட்டுப் பரிசோதனைகள் | 228 |
| 2. | ஆய்வு கூடங்களில் செய்யப்பட்ட பரிசோதனைகள் | 235 |
| 3. | நுரையீரல் தொழிற்பாடு தொடர்பான பரிசோதனைகள் | 857 |
| 4. | ஒலியினால் மாசடைதல் தொடர்பாக செய்யப்பட்ட பரிசோதனைகள் | 605 |
| 5. | நடத்தைக்கு தடையாகவுள்ள பாதுகாப்பு தொடர்பாக இடம் பெற்றுள்ளபயிற்சிகள் மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் | |
| | தொழிற்சாலை முகாமையாளர்கள் | 725 |
| | மேற்பார்வை அலுவலர்கள் | 1245 |
| | தொழிற்சாலை வேலையாட்கள் | 3410 |
| 6. | ஊழியர் சேமலாப நிதி தொடர்பான வைத்திய குழாம் பரிசோதனைகள் | 600 |
| 7. | வேலையிலீடுபட்டிருக்கும் போது விபத்துக்குட்பட்ட ஊழியர்களின் பொருட்டுதொழிலாளர் நட்ட ஈட்டு நீதிமன்றத்திற்கு சமூகமளித்த தடவைகள் | 9 |
| 8. | செயற்பட முடியாத வேலையாட்களின் பொருட்டு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு விடயங்களைச் சமர்ப்பித்த தடவைகள் | 520 |
| 9. | கட்டுநாயக்கா வர்த்தக வலய ஊழியர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தினை நடத்தியமை. | |
| 10. | தேசிய தொழில் பாதுகாப்பு மற்று சுகாதார வாரத்தின் பொருட்டு சிலோன் பிஸ்கற் நிறுவனத்தில் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்தியமை. | |

## 7. திட்டமிடுதல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

தொழில் திணைக்களத்திலுள்ள பிரிவுகளுக்கிடையே முக்கியமானதும் செயல் திறன் கொண்ட சேவையை நிறைவேற்றும் பிரிவாக திட்டமிடுதல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப்பிரிவினை அடையாளப்படுத்தக் கூடியதாக இருப்பதுடன், இலங்கையின் தொழிலாளர் சமூகத்தினருடைய நலன்களைப் போன்று வினைத்திறனையும் மேம்படுத்த திணைக்களத்தினூடாக செயற்படுத்த வேண்டிய திட்டங்கள் தொடர்பாக உரிய பிரிவுகளை அறிவுறுத்துதல், அந்தப்பிரிவுகளினால் முன்மொழியப்பட்ட திட்ட யோசனைகளை ஒழுங்குபடுத்தி தேர்ச்சியுடையதான திட்டங்களை நிதி மூலங்களுக்காக சமர்ப்பித்து அங்கீகரிக்கப்படும் திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேவையான பல வகையான உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கும், முன்னேற்ற நிர்வாகம் மற்றும் நடைமுறைப்படுத்தல், மதிப்பீடு செய்தல் நடவடிக்கைகளை செய்வதன் மூலம் திட்டத்தின் குறிக்கோளின்படி உரிய காலத்தினுள் நிறைவேற்றுவதன் மூலம் எதிர்பார்த்த பிரதிபலன்களை அடைதல் மூலம், காலத்தின் தேவைக்கு ஏற்ப செய்யப்படும் ஆராய்ச்சியின் பிரகாரம் கிடைக்கும் முடிவுகளை மற்றும் தரவுகளை வெளியிடுதல், உயிரோட்டமுள்ள தொழிற்துறைக்கு செயற்திறனுடன்முகங்கொடுக்கக்கூடிய வகையிலும், புதிய தொழில் நுட்ப அறிவினை வழங்கி அலுவலர்கள் வகுப்பொன்றினை உருவாக்குவதற்கும் தேவையான பயிற்சி மற்றும் அறிவினை பெற்றுக்கொடுப்பது திட்டமிடல் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப்பிரிவின் நடவடிக்கைகளாகச் சுட்டிக்காண்பிக்க முடியும்.

### 2015 ஆம் ஆண்டில் இப் பிரிவு நிறைவேற்றிய விடயங்கள்

திட்டமிடல் பிரிவினூடாக, திணைக்களத்தின் சகல பிரிவுகள் மற்றும் வலய, மாவட்ட மற்றும் உப அலுவலகங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக வருடாந்த ஒன்றிணைந்த செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. அந்த வேலைத்திட்டத்திற்குரிய 2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு,வேலைத்திட்ட ஒதுக்கீட்டின் கீழ் 9.636 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் 5 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு நிறைவடைந்துள்ளன. இதற்கு மேலதிகமாக வேறு முதலீட்டுப் பெயரிலான நிதி மூலங்களின் கீழ் 1.8 மில்லியன் ரூபா செலவு செய்து 3 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### புள்ளி விபரப் பிரிவு

நாடு பூராகவும் நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலைகள் மற்றும் சேவை நிலையங்களில் சேவையிலீடுபட்டிருக்கும் தனியார் துறை மற்றும் மருவிய அரசு சார் நிறுவன ஊழியர் குழாமினை அடிப்படையாகக் கொண்டு,நாளது வரைப்பட்டதும் மற்றும்

நம்பகமானதுமான தரவுகள் சேகரிக்கப்பட்டு,விபரங்கள் திட்டங்களை வரையும் ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்துகின்றனர். தொழிற்றிணைக்களத்திற்குரிய தரவு மற்றும் விபரங்கள் உட்பட புள்ளி விபரங்களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் வெளியிடுதல் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**புள்ளி விபரப்பிரிவினால் 2015ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்**

❖ **வருடாந்த தொழில் அளவீடு**

1971 ஆம் ஆண்டிலிருந்து சகல வருடங்களிலும் யூன் மாதத்தில் செய்யப்படும் இந்த அளவீட்டின் பிரதான நோக்கம், நிர்வாக ரீதியான, நிதி ரீதியான மற்றும் திட்ட நடைமுறைத் தேவையின் பொருட்டு உதவியாக இருக்கும் புள்ளிவிபரத் தரவுகளை சேகரித்தலாகும். 2015 ஆம் ஆண்டு தொடர்பாக தொழில் ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (2015.03.15 ஆம் திகதியன்று உள்ள நிலைமைகள்)

❖ **சாதாரண உழைப்பு மற்றும் வேலை செய்யும் மணித்தியால எண்ணிக்கை தொடர்பான அளவீடு**

சம்பளச் சபையினால் ஆகக்குறைந்த சம்பளம் தீர்மானிக்கப்பட்டுள்ள தொழில் நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்களின் மாதாந்த சாதாரண உழைப்பு மற்றும் வேலை செய்யும் மணித்தியால எண்ணிக்கை தொடர்பாக தரவுகளைச் சேகரித்தல் இந்த அளவீட்டின் முக்கியமான நோக்கமாகும். மார்ச் மாத்திற்குரிய இந்த அளவீடு முடிவடைந்துள்ளதுடன், 2015 ஆம் ஆண்டு தொடர்பான சாதாரண உழைப்பு மற்றும் வேலை செய்யும் மணித்தியாலங்கள் தொடர்பான அறிக்கை 2016 ஆம் ஆண்டு முதலாவது காலாண்டுப்பகுதியினுள் வெளியிடப்படுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

❖ **ஆகக்குறைந்த சம்பளக் குறிகாட்டியொன்றினை தயாரித்தல்**

சம்பளச்சபையின் கீழ் தொழில் ஆணையாளர் அதிபதியினால் தீர்மானிக்கப்படும் ஆகக்குறைந்த சம்பளம் மற்றும் சரியான காலத்தில் நிகழும் புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு மாதாந்தம் இந்தக் குறியீடுகள் கணிக்கப்படும். இது தொடர்பாக 10 வருடத்திற்குட்பட்ட குறியீடுகள் தொடர்பாக புள்ளி விபரங்களைத் தயாரித்தல், அவற்றினை வெளியிடுதல் புள்ளி விபரக்கிளையின் 2015 ஆம் ஆண்டின் செயற்பாடாகக் குறிப்பிடலாம்.

❖ **தொழில் புள்ளி விபர வெளியீடு**

தொழில் திணைக்களப் புள்ளிவிபரப்பிரிவினால் வருடந்தோறும் வெளியிடப்படும் தரவுகள் மற்றும் விபரங்கள் உட்பட்ட தொழில் புள்ளிவிபர வெளியீடுகள் என்பன வெளியிடப்படுகின்றன.

## 08.தொழில் திணைக்களத்தின் பொது நிர்வாகம்

தொழிற்றிணைக்களத்தின் தொலை நோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றினை அடைவதன் பொருட்டும், திணைக்களத்தின் பல பிரிவுகளும் சரியான குறிக்கோளினை நோக்கிய சேவையின் பொருட்டும், நடவடிக்கைகளைச் செயற்படுத்துவது நிருவாகப் பிரிவினூடாக இருப்பதுடன் இந்தப்பிரிவின் பிரதான நோக்கமானது திணைக்களத்திலுள்ள மனித வளத்தினை போதுமான அளவாகவும், தரமானதாகவும் அபிவிருத்தி செய்து திணைக்களத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளையும் பௌதீக வளங்களையும் போதுமான அளவாகவும் தரமானதாகவும் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகும்.

**மனித வள அபிவிருத்தி**

தொழில் திணைக்களத்தில் சேவையிலீடுபட்டிருக்கும் ஊழியர்களினுடைய தொழிலினை அபிவிருத்தி செய்வதுடன் சேவை வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கைகளைச் செய்யும் ‘‘நிருவாகப் பிரிவின்’’ ஊடாக நிறைவேற்றப்படும் விரும்பத்தக்க சேவையாகும்.

மனித வள அபிவிருத்தி சம்பந்தமாக தொழிற்றிணைக்களத்தினால் கீழ் குறிப்பிட்டுள்ள அலுவலர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சியினைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| பதவிகள் | பயிற்சியின் எண்ணிக்கை |
|---|---|
| மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி | 01 |
| தொழில் ஆணையாளர் | 04 |
| பிரதித் தொழில் ஆணையாளர் | 04 |
| உதவித் தொழில் ஆணையாளர் | 06 |
| கணக்காளர் | 01 |
| விசேட தொழில் பரிசோதனைப் பொறியியலாளர் | 01 |
| புள்ளி விபர அலுவலர் | 01 |

**2015 ஆம் ஆண்டில் தொழில் திணைக்களத்திற்கு புதிதாக இணைத்துக் கொள்ளுதல்கள்**

திணைக்களத்தினால் செய்யப்பட்ட புதிதாக இணைத்துக்கொள்ளுதல்கள்

| | |
|---|---|
| சட்ட அலுவலர்கள் | 05 |
| சிற்றூழியச் சேவை அலுவலர்கள் | 20 |
| இணைந்த சேவைகள் மற்றும் நாடு பூராகவும் சேவையில் புதிய நியமனமாக திணைக்களத்திற்குசேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள். | |
| உதவித்தொழில் ஆணையாளர் (இலங்கை நிருவாக சேவை) | 06 |
| அரச முகாமைத்துவ உதவியாளர்கள் | 219 |

**பௌதீக வளத்தினை அபிவிருத்தி செய்தல்**

**பொறியியலாளர் மற்றும் கட்டிட பராமரிப்பு அலகு**

திணைக்களத்திலுள்ள இன்னுமொரு செயற்படு பிரிவாக அடையாளப்படுத்தக்கூடியதாக பொறியியலாளர் மற்றும் கட்டிட பராமரிப்பு அலகு உள்ளது. திணைக்களத்திலுள்ள சகல கடடிடங்களையும் மிகவும் நல்ல நிலைமையில் பேணிச்செல்வதற்கும் புதிய கடடிடத்தேவைகளை நிறைவேற்றுவதற்கும் செய்யப்படும் முயற்சிகள் போற்றக்கூடியதாகும்.

கட்டிட பராமரிப்பு பிரிவினால் தற்போது மேற்கொள்ளப்படுவது, தலைமை அலுவலகமாக சுட்டிக்காட்டக்கூடியதான ''தொழில் இல்லம்'' எனும் பெயரில் தொழிற்றிணைக்களத்திற்காக 36 மாடிகளைக் கொண்ட அழகான பாரிய கட்டிடம் ஒன்று கட்டப்படுவதுடன் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தப் பாரிய கடடிடத்தின் 17 மாடிகள் வரை கட்டுவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இதற்கு மேலதிகமாக கட்டடப்பராமரிப்பு பிரிவினால் 2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சேவையை கீழ் வருமாறுகாட்ட முடியும்.

| இல | கட்டடம்அமைக்கப்பட்ட இடங்கள் | 2015 ஆம் வருடத்திற்கான உத்தேச மதிப்பீட்ட தொகை (ரூபா.000) | 2015.12.31 அன்று வரை செலவழிக்கப்பட்ட தொகை (ரூபா.000) |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 23,000 | 23,000 |
| 2 | அவிசாவளை | 20,000 | 20,000 |
| 3 | முல்லைத்தீவு | 25,000 | 25,000 |
| 4 | நீர்கொழும்பு | 25,000 | 25,000 |
| 5 | பெலியத்தை | 30,000 | 30,000 |
| 6 | கிளிநொச்சி | 25,000 | 25,000 |
| 7 | பொலன்னறுவை | 25,000 | 25,000 |
| 8 | புத்தளம் | 10,000 | 10,000 |
| 9 | அனுராதபுரம் | 5,000 | 2,269 |
| 10 | குருநாகல் | 30,000 | 30,000 |




மெஹவர பியச

**நூல்நிலையமும் அரும்பொருட்காட்சி சாலையும்**

தொழில் திணைக்களத்தின் நூல் நிலையத்தினால் 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகளாக முக்கியத்துவம் பெறுவது, நூல் நிலைய ஒதுக்கீடுகளை அபிவிருத்தி செய்தல், நூல் நிலைய வசதிகள் மற்றும் விபரங்களை வழங்கல், கிளை நூல் நிலையங்களை மேலும் முன்னேற்றுதல், தரவு முகாமைத்துவ முறையைப் பேணிச்செல்லுதல், திணைக்கள வெளியீட்டுக்குழு மற்றும் வெப் குழு போன்ற குழுக்களின் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல், புத்தகங்களை விற்பனை செய்தல், போட்டோ பிரதி எடுத்தல் சேவையை நடத்திச்செல்லுதல் என்பவை சுட்டிக்காட்டக் கூடியவையாகும்.

1923ஆம் ஆண்டு ஆரம்பமான இந்திய குடிவரவு தொழில் கட்டுப்பாட்டாளரின் திணைக்களத்தின் ஆரம்பம் தொழிற்றிணைக்களத்திற்கு அன்றும் இன்றும் உரித்தான முக்கியத்துவமான நூதன பொருட்கள், ஆவணங்கள் ஆகிய பெறுமதியான நூதன பொருட்கள் நிறைந்த, இலங்கையில் நடைமுறையிலிருக்கும் தொழில் துறைக்கு உரித்தான ஒரேயொரு அரும்பொருட் காட்சிச்சாலையை மேலும் நல்ல முறையில் பேணிச்செல்லுதல் நூல் நிலையத்தின் கடப்பாடுள்ள கடமையாகக் குறிப்பிடலாம்.

**நிதிப்பிரிவு**

தொழில் திணைக்களத்தில் சுறுசுறுப்பாகத் தொழிற்படும் பிரிவொன்றாக நிதிப்பிரிவினை குறிப்பிடக் கூடியதாக இருப்பதுடன், திணைக்களத்தினால் செய்யப்படும் சகல நடவடிக்கைகள் தொடர்பாக மதிப்பிடப்பட்ட செலவுகளை அந்தந்தப் பிரிவுகளிலிருந்து பெற்று ஒழுங்கான மதிப்பீடு செய்து மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள் என வகைப்படுத்தி நிதி அமைச்சிற்கு வழங்கி அதனூடாக அனுமதிக்கப்படும் நிதித் தலைப்புகளின் மதிப்பீட்டுச் செலவினங்களை விஞ்சாத வகையில் செலவு செய்தல் நிதிப்பிரிவின் தொழிற்பாடாகும் என சுட்டிக்காண்பிக்க முடியும்.

# 9. புள்ளிவிபரக் கையேடு

## கைத்தொழில் தொடர்புகள் பிரிவு

| | | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| **கைத்தொழில் பிணக்குகள் பற்றிய புள்ளிவிபரங்கள்** | | | | | |
| தெரிவிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை | | 3,702 | 3,204 | 2,602 | 1,561 |
| தீர்க்கப்பட்டவற்றின் எண்ணிக்கை | | 3,695 | 3,077 | 2,589 | 1,493 |
| பதிவுசெய்யப்பட்ட கூட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | | 43 | 34 | 50 | 40 |
| **தொழிற்சங்கங்கள்** | | | | | |
| பதிவுசெய்யப்பட்ட தொழிற்சங்கங்கள்/ சம்மேளனங்கள் | | 114 | 108 | 125 | 181 |
| இரத்துச் செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் / சம்மேளனங்கள் | | 02 | 114 | 255 | 315 |
| **கைத்தொழில் நீதிமன்றங்கள்** | | | | | |
| கட்டாய நடுத்தீர்ப்பிற்கு விடப்பட்டவை | | 43 | 49 | 53 | 28 |
| வழங்கப்பட்ட தீர்த்தளிப்புக்கள் | | 26 | 35 | 42 | 35 |
| **பணி நிறுத்தம் பற்றிய புள்ளிவிபரங்கள்** | | | | | |
| தெரிவிக்கப்பட்ட பணி நிறுத்தம் | தோட்டங்கள் | 14 | 22 | 31 | 20 |
| | தாபனங்கள் | 20 | 20 | 07 | 16 |
| பங்குபற்றிய வேலையாளர்களின் எண்ணிக்கை | தோட்டங்கள் | 4,338 | 5,031 | 4,833 | 5,229 |
| | தாபனங்கள் | 5,626 | 6,088 | 1,618 | 3,171 |
| இழக்கப்பட்ட உழைப்பு நாட்கள் | தோட்டங்கள் | 25,043 | 41,669 | 29,165 | 29,743 |
| | தாபனங்கள் | 10,774 | 38,754 | 8,158 | 8,630 |
| **தொழில் முடிவுறுத்தல் பிரிவின் செயற்பாடுகள்** | | | | | |
| பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 92 | 134 | 149 | 171 |
| தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 143 | 112 | 148 | 162 |
| தொழில் முடிவறுத்தலுக்காக அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | 31 | 41 | 51 | 24 |
| **சமூகக் கலந்துரையாடல் மீதான நிகழ்ச்சித்திட்டம்** | | | | | |
| சமூகக் கலந்துரையாடல் அலகினால் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 153 | 107 | 88 | 80 |
| | சமுகமளித்த வேலையாளர்களின் எண்ணிக்கை | 4,751 | 6,560 | 5,433 | 4,403 |
| மாவட்ட, உப அலுவலகங்களினால் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 225 | 214 | 199 | 116 |
| | சமுகமளித்த வேலையாளர்களின் எண்ணிக்கை | 7,902 | 7,768 | 6,861 | 4,094 |

2015.12.31 இல் தொழிற்படுகின்ற தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை - 1,907

2015.12.31இல் தொழிற்படுகின்ற தொழிற் சம்மேளனங்களின் எண்ணிக்கை –27

### சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவு

| சட்டம் | தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 |
| பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் | 3,404 | 2,371 | 2,044 | 2,524 |
| கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | 77 | 126 | 146 | 153 |
| தொழில் முடிவுறுத்தல் சட்டம் | 59 | 58 | 36 | 49 |
| சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் | 290 | 203 | 244 | 282 |
| கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | 132 | 112 | 88 | 99 |
| மகப்பேற்று நன்மைகள் சட்டம் | 02 | 05 | 03 | 03 |
| பெண்கள்,இளையோர் மற்றும் சிறுவர்களை தொழிலில் அமர்த்துதல் சட்டம் | 10 | 07 | 11 | 05 |
| ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் | 3,210 | 3,415 | 3,244 | 2,336 |
| தொழில் நியாயசபைக் கட்டளைகள் | 165 | 144 | 183 | 164 |
| வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச்சட்டம் | 134 | 22 | 32 | 29 |
| அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியம் | 07 | 01 | 07 | 03 |

### விசேட புலனாய்வுப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| முறைப்பாடுகள்மீதான புலன்விசாரணை | 264 | 122 | 216 | 292 |
| கணிக்கப்பட்ட ஊ.சே.நிதியத்தின் வரவேண்டிய நிலுவைத்தொகை (ரூபா.ஆயிரத்தில்) | 313,770 | 28,012 | 32,416 | 634,969 |
| கணிக்கப்பட்ட நிதியச்சட்டப் பணங்களின் பெறுமதி (ரூபா.ஆயிரத்தில்) | 40,831 | 5,814 | 2,970 | 4,996 |

## ஊழியர் சேமலாபநிதிப் பிரிவு

| | 2012.12.31 வரை | 2013.12.31 வரை | 2014.12.31 வரை | 2015.12.31 வரை |
|---|---|---|---|---|
| அங்கத்தவர்கள் கணக்குகளின் மொத்தம் | 14,559,328 | 15,203,073 | 15,449,037 | **** |
| தொழில்தருநர்களின் மொத்த எண்ணிக்கை | 198,893 | 204,777 | 2010,595 | **** |
| நிதியத்தின் பெறுமதி (ரூபா.மில்லியன்) | 1,144,409 | 1,299,974 | 1,486,931 | 1,664,852 |
| செயற்பாடுடைய அங்கத்தவர்களின் எண்ணிக்கை (மில்லியன்)* | 2.34 | 2.40 | 40 | 2.40 |
| செயற்பாடுடைய தொழில் தருநர்களின் எண்ணிக்கை** | 68,140 | 69,148 | 69,683 | 72,917 |

| | | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| புதிய பதிவுகள் | பணியாளர்கள் | 785,078 | 813,010 | 827,883 | **** |
| | தொழில்தருநர்கள் | 7,195 | 7,802 | 6,176 | ***5,770 |
| நன்மைக்கொடுப்பனவுகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | 115,654 | 114,275 | 127,492 | 127,107 |
| | செலுத்தப்பட்ட நன்மைகள் (ரூபா.மில்லியன்) | 48,712 | 50,407 | 65,118 | 77,769 |
| உதவுதொகைகளைச் சேகரித்தமை (ரூபா மில்லியன்) | | 70,171 | 77,335 | 90,049 | 102,453 |
| ஊ.சே.நி வீடமைப்பக் கடன்கள் | அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 11,234 | 16,268 | 17,786 | 13,132 |
| | அங்கீகரிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி (ரூபா மில்லியன்) | 3,973 | 6,914 | 8,021 | 5,377 |

* ஆண்டுகாலப்பகுதியில் ஆகக் குறைந்தது ஒருமுறையேனும் உதவித் தொகை செலுத்தப்பட்டுள்ள அங்கத்தவர்கள் கணக்குகள்.

** ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது ஒருமுறையேனும் பணியாளர்கள் சார்பாக உதவித்தொகைகளைச் செலுத்தியுள்ள தொழில்தருநர்கள்.

*** 2015.09.30 ஆந் திகதி வரை இற்றைப்படுத்தப்பட்ட விபரங்களாகும்

**** தற்போதைக்கு விபரங்களைப் பெற முடியவில்லை.

## தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை | 22,459 | 23,974 | 25,236 | 26,198 |
| செய்யப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 6,700 | 6,372 | 5,067 | 5,090 |
| பரிசோதகர்களின் எண்ணிக்கை (பொறியியலாளர்கள்) | 28 | 28 | 30 | 28 |
| திட்டங்களுக்கான அங்கீகாரம் | 106 | 97 | 111 | 130 |
| விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள். | 229 | 218 | 147 | 205 |

## தொழில்சார் சுகாதாரப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| தொழிற்சாலை பரிசோதனைகளின் எண்ணிக்கை | 410 | 352 | 250 | 312 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 137 | 190 | 296 | 204 |

**திட்டமிடல், ஆராய்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு**

| | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| பதவிநிலை அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 04 | 14 | 18 | 36 |
| முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 08 | 17 | 23 | 16 |
| கணினிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 33 | - | 17 | 02 |
| ஏனைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 02 | 02 | 08 | 11 |
| பட்டப் பின்படிப்பு பாடநெறிகள் | 20 | 41 | 81 | 56 |
| வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 57 | 23 | 18 | 13 |
| முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் | 05 | 06 | 05 | 05 |

**நிதிப் பிரிவு**

| | | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | ஏற்பாடு(ரூபா) | 1,100,630,000 | 1,138,550,000 | 1,411,200,000 |
| | செலவினம்(ரூபா) | 1,016,129,728 | 1,117,107,412 | 1,364,002,819 |
| மூலதனச் செலவினம் | ஏற்பாடு (ரூபா) | 760,275,000 | 373,200,000 | 1,705,904,000 |
| | செலவினம்(ரூபா) | 732,936,934 | 306,883,421 | 1,574,171,513 |

**தாபனப் பிரிவு**

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| **ஆண்டின் ஆரம்பத்தில் மொத்தப் பதவியணி** | 2,219 | 2,169 | 2,256 |
| • திணைக்களத்தினால் புதிய ஆட்சேர்ப்புக்கள் | 1 | 32 | 25 |
| • இணைந்த சேவையின் புதிய நியமனங்களாகச் சேர்க்கப்பட்டவர்கள் | 37 | 163 | 219 |
| • இடமாற்றல்கள் (நிகரம்) | (1) | (10) | (63) |
| • ஏனைய காரணங்களினால் தொழில் திணைக்களத்தின் பதவியினருடன் சேர்க்கப்பட்டவர்கள் | - | 5 | 0 |
| • ஓய்வுபெற்றவர்கள் | (55) | (5) | (26) |
| • ஏனைய காரணங்களினால் தொழில் திணைக்களத்தின் பதவியினர் விலகுதல் | (32) | (53) | (6) |
| **ஆண்டின் இறுதியில் மொத்தப் பதவியணி** | 2,169 | 2,256 | 2,405 |

## 2015.12.31 ஆம் திகதி தொழில் திணைக்களத்தின் அலுவல்கள்

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியனிகள் | தற்போதைய பதவியனிகள் | அமைய பிரதியீட்டு | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| **சிரேஷ்ட** | | | | | |
| 1. | தொழில் ஆணையாளர் நாயகம் | 1 | 1 | | 0 |
| 2. | மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (இ.நி.சே) | 1 | 1 | | 0 |
| 3. | மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (திணைக்களங்கள்) | 1 | 0 | | 1 |
| 4. | மருத்துவ அதிகாரி | 4 | | | 2 |
| | மருத்துவ அதிகாரி | | 1 | | |
| | மருத்துவ அதிகாரி (ஆராய்ச்சி) | | 1 | | |
| 5. | தொழில் ஆணையாளர் (இ.நி.சே) | 6 | 7 | | (1) |
| 6. | தொழில் திணைக்களங்கள் (திணைக்களம்) | 2 | 0 | | 2 |
| 7. | தொழில் ஆணையாளர் (கைத்தொழில் பாதுகாப்பு மற்றும் தலைமை தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர்) (இ . பொ .சே) | 1 | 1 | | 0 |
| 8. | தொழில் ஆணையாளர் (இ.வி.சே) (இ.ம .சே) | 1 | 0 | | 1 |
| 9. | தலைமை கணக்காளர் | 1 | 1 | | 0 |

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியனிகள் | தற்போதைய பதவியனிகள் | அமைய பிரதியீட்டு | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 10. | தலைமை கணக்காய்வாளர் | 1 | 1 | | 0 |
| 11. | தலைமை சட்ட அலுவலர் மற்றும் தொழில் ஆணையாளர் (சட்ட அமுலாக்கம்) | 1 | 0 | 1 | 1 |
| 12 | பிரதித் தொழில் ஆணையாளர் /பிரதி தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர்) (இ . பொ .சே) | 1 | 1 | | 0 |
| 13. | பிரதி தொழில் ஆணையாளர் (இ.தி .சே) | 15 | 0 | | 15 |
| 14 | பிரதி தொழில் ஆணையாளர் (திணைக்களம்) | 9 | 6 | | 3 |
| 15 | பி .தொ.ஆ .விசேட ஆராய்ச்சி அலுவலர் (இ.நி.சே) | 1 | 0 | | 1 |
| 16. | கணக்காளர் | 5 | 4 | | 1 |
| 17. | உதவித் தொழில் ஆணையாளர் (இ.தி.சே) | 41 | 38 | | 3 |
| 18. | உதவித் தொழில் ஆணையாளர் (திணைக்களம்) | 63 | 40 | | 23 |
| 19. | சட்ட அலுவலர் | 14 | 7 | | 7 |
| 20. | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 1 | 1 | | 0 |
| 21. | விசேட தொழிற்சாலை பரிசோதனை அலுவலர் (இ.பொ.சே) | 3 | 3 | | 0 |

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகள் | தற்போதைய பதவியணிகள் | அமைய பிரதியீட்டு | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 22. | மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் | 10 | 10 | | 0 |
| 23. | சிவில் பொறியியலாளர் (சி.பொ.சே) | 1 | 0 | | 1 |
| 24. | தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் (இ . பொ.சே) | 14 | 12 | | 2 |
| 25. | இரசாயனப் பொறியியலாளர் | 2 | 2 | | 0 |
| 26. | சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர் (இ.வி.சே) | 1 | 1 | | 0 |
| 27. | சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர் (இ.வி.சே) | 3 | 3 | | 0 |
| 28. | உதவிப் பணிப்பாளர் (இ.த.தொ.சே) | 1 | 0 | | 1 |
| மொத்தம் | | 205 | 142 | 1 | 63 |
| மூன்றாம் கட்டம் | | | | | |
| 29 | நூலகம் (மேல்தரம்) | 1 | 0 | | 1 |
| 30 | தொழில்நுட்ப அலுவலர்(இ.தொ.சே)(விசேட வகுப்பு) | 1 | 0 | | 1 |
| 31 | விரல் அடையாளம் பரிசோதிக்கும் அலுவலர் (விசேட வகிப்பு இ.தொ.சே) | 1 | 0 | | 1 |
| 32 | தொழில் அலுவலர் (மேல்தரம்) | 56 | 0 | | 56 |

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியனிகள் | தற்போதைய பதவியனிகள் | அமைய பிரதியீட்டு | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 33 | பதிவாளர் | 1 | 1 | | 0 |
| 34 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் | 3 | 0 | | 3 |
| 35 | மொழிப்பெயர்ப்பாளர் (சிங்களம் ஆங்கிலம்) | 2 | 2 | | 0 |
| 36 | மொழிப்பெயர்ப்பாளர் (தமிழ் ஆங்கிலம்) | 1 | 1 | | 0 |
| 37 | மொழிப்பெயர்ப்பாளர் (சிங்களம் தமிழ்) | 3 | 0 | | 3 |
| 38 | நிருவாக உத்தியோகத்தர் | 2 | 1 | | 1 |
| 39 | தொழில் அலுவலர் | 597 | 395 | | 202 |
| | மொத்தம் | 668 | 400 | 0 | 268 |
| இரண்டாம் மட்டம் | | | | | |
| 40 | தள அலுவலர் | 10 | 10 | | 0* |
| 41 | மனிதவள அபிவிருத்தி அலுவலர் | 69 | 69 | | 0* |
| 42 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 96 | 0 | | 96 |
| 43 | தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) | 1 | 0 | | 1 |
| 44 | தொழில்நுட்ப அலுவலர் (மின்சாரம்) | 1 | 1 | | 0 |
| 45 | விரல் அடையாளம் பரிசோதிக்கும் அலுவலர் | 5 | 4 | | 1 |

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியனிகள் | தற்போதைய பதவியனிகள் | அமைய பிரதியீட்டு | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 46 | ஆராய்ச்சி அலுவலர் | 4 | 0 | | 4 |
| 47 | கட்டிட பரிசோதகர் | 4 | 0 | 1 | 4 |
| 48 | வரைவாளர் | 3 | 2 | | 1 |
| 49 | நூலகம் | 4 | 3 | | 1 |
| 50 | பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | 1527 | 1299 | | 228 |
| 51 | எழுது வினைஞர் (ஊ.சே.தி) | 19 | 19 | | 0* |
| 52 | சுருக்கெழுத்தாளர் | 10 | 8 | 1 | 2 |
| 53 | கணனி இயக்குனர் | 0 | 0 | | 0* |
| 54 | பொறுப்பான அலுவலர் | 4 | 3 | | 1 |
| 55 | விடுதி காப்பாளர் | 4 | 3 | | 1 |
| 56 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 9 | 7 | | 2 |
| 57 | போக்குவரத்து அலுவலர் | 1 | 1 | | 0 |
| | மொத்தம் | 1771 | 1429 | 2 | 342 |
| **முதல் மட்டம்** | | | | | |
| 58 | வாகன ஓட்டுனர் | 82 | 76 | | 6 |
| 59 | மின்சாரவியலாளர் | 2 | 2 | | 0 |
| 60 | இயந்திரம் பழுதுபார்ப்பவர் | 1 | 1 | | 0 |
| 61 | தச்சு வேலையாளர் | 1 | 1 | | 0 |

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியனிகள் | தற்போதைய பதவியனிகள் | அமைய பிரதியீட்டு | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 62 | குழாய் செப்பனுடுபவர் | 1 | 1 | | 0 |
| 63 | சுற்றுலா விடுதிகள் காப்பாளர் | 5 | 4 | | 1 |
| 64 | அலுவலக உதவியாளர் | 350 | 299 | | 51 |
| 65 | காவலர் | 40 | 44 | | (4) |
| 66 | லொறி துப்பிரவாக்குபவர் | 1 | 1 | | 0 |
| மொத்தம் | | 483 | 429 | 0 | 54 |
| பெருமொத்தம் | | **3127** | **2400** | **3** | **727** |

- "அரசாங்க நிறுவனங்களின் தேவைகளுக்கான எல்லைகளுக்குட்பட்டு பதவியணியினைச் சீரமைப்பதற்கான பரிந்துரைத்தல் "என்ற தலைப்புடையதும் 30 .11 .2012ஆம் திகதியும் இ னுஆளு.'.ஊ.'.08.'.36.'.01-எழுட 1 இலக்கமும் உடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் தொழில் திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியினரின் பிரகாரம் பதவி வகிப்பவருக்குத் தனிப்பட்ட முறையில் உள்ள ஏற்புடைமை தொடர்பாக மேலுள்ள பதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் பின்னர் அவை இல்லாதொழிக்கப்படும்.

# 10. பின்னிணைப்பு

திணைக்களத்தின் நிறுவகக் கட்டமைப்பு

